திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, உபகாரச் சம்பளம் வழங்குவதைப்பற்றி மத்திய அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசுக்கு இம்மாதிரியான எந்தெந்த முறைகளில் உபகாரச் சம்பளம் உயர்த்தவேண்டுமென்று இந்த அரசு ஏதாவது ஆலோசனை கொடுத்திருக்கிறதா ? அந்த ஆலோசனையைத்தான் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நீண்ட காலமாக அளித்து வந்த உபகாரச் சம்பளம்—மத்திய அரசு 1968–69-ம் ஆண்டு எவ்வளவு தொகை கொடுத்துக்கொண்டு வந்தார்களோ, அந்தத் தொகையில் எத்தனை பேர்களுக்கு கொடுத்துக்கொண்டிருந்தார்களோ, அத்தனை பேர்களுக்கு அந்தத் தொகை கொடுக்க முடியும் என்று முடிவு எடுத்து, இதுவரையில் 1968–69-ல் எத்தனை பேர்களுக்கு எவ்வளவு தொகை கொடுத்தார்களோ அதே தொகையைத்தான்—ஆண்டு தோறும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறோம். பல பேர் பல நிலைகளிலிருந்து மாணவர்கள் உட்பட மத்திய அரசுக்கு உயர்த்த வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் மத்திய அரசு கவனிக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் மிர்தா அவர்கள் அது பற்றிக் கூறியிருப்பதை பத்திரிகையில் பார்த்தேன். அதைத்தான் நானும் கூறினேன்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, விலைவாசி ஏற்றத்தால் விடுதிக் கட்டணம் உயர்ந்து இருக்கிறது. முன்பெல்லாம் மாணவர்களுக்கு அந்தத் தொகை போதவில்லையென்றால், மாநில அரசு கொஞ்சம் உதவித் தொகை கொடுத்து அதைச் சரிக்கட்டிக்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட முறையை இப்போது தொடர்ந்து செய்து வருகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மத்திய அரசு உதவித் தொகை, மாநில அரசு உதவித் தொகை என்று இரண்டு விதமான உதவித் தொகைகள் உண்டு. அதிலே மத்திய அரசு உதவித் தொகைக்கும், மாநில அரசு உதவித் தொகைக்கும் ஏற்றத் தாழ்வு இருந்தால் அந்த வித்தியாசத் தொகையை கொஞ்சம் கூடுதல் குறைவு இருக்குமானால் அதை மாநில அரசு அப்படிப்பட்ட உதவித் தொகையாக மாணவர்களுக்குக் கொடுக்கிறது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்

*671 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1973-ம் ஆண்டில், இலங்கையிலிருந்து இந்தியத் துணைக் கண்டத்திற்கு திருப்பி அனுப்பப்படவிருக்கும் இந்தியர்கள் எத்தனை பேர் ?

(இ) அதில் தமிழகத்திற்கு அனுப்பப்படும் தமிழர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) கடந்த 1973-ஆம் ஆண்டில், சுமார் 38,500 இந்திய வமிசா வழியைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இவர்களில் பெரும்பாலோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாவர். கடல் மார்க்கமாக தாயகம் திரும்புவோர் அனைவரும், இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டத்திலுள்ள இராமேஸ்வரத்தில் வந்து இறங்குகிறார்கள். இந்த மாநிலத்திலுள்ள பல்வேறு திட்டங்களில் எந்த அளவிற்கு அவர்களை குடியமர்த்த இயலுமோ அந்த அளவிற்கு அவர்கள் குடியமர்த்தப்படுவார்கள்.

திரு. எல். கணேசன்: தலைவரவர்களே, இலங்கையிலிருந்து இங்கே அகதிகளாக அனுப்பப்படுகிறவர்கள் ஸ்ரீமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா—லால்பகதூர் சாஸ்திரி இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தால், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒப்பந்தத்தால்தான் அனுப்படுகிறார்கள். அப்படி அகதிகளாக வருகிறவர்களிலே 100-க்கு 90 சத விகிதம் தமிழர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு எவ்வளவு நிதி வழங்குகிறது, மாநில அரசு எவ்வளவு நிதி என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முழுத் தொகையையும் மத்திய அரசு கொடுக்கிறது. ஆனால் இப்போது புதிதாக ஒரு உத்திரவு வந்திருக்கிறது. மாநில அரசு இதற்கு என்று திட்டங்களைத் தீட்டி, அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்க முடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரையில் மத்திய அரசுதான் அந்த அகதிகளுக்கு முழுச் செலவையும் செய்து கொண்டு வந்திருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்த இலங்கையிலிருந்து வருகிறவர்கள் இந்தியர்கள்தான். இங்கே இந்தியா ஒரே நாடு என்று கூறப்படுகிறது. மத்திய அரசுக்கும்—இலங்கை அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் இங்கு வருகிறார்கள். அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதற்காக எல்லா மாநிலங்களிலும் வேலை வாய்ப்புத் தேடித் தர இந்திய அரசு ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா? இல்லையென்றால் மாநில அரசு மத்திய அரசை அந்த வகையில் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, மத்திய அரசு அருகாமையில் இருக்கும் மாநிலங்களான ஆந்திரம், கேரளம், கருநாடகம் போன்ற பல மாநிலங்களில் அவர்களைக் குடியமர்த்த வேண்டுமென்று கூறுகிறது. பெரும்பாலும் 100-க்கு 90 பேர் தமிழர்கள். அவர்கள் மற்ற மாநிலங்களில் சென்று இருப்பதற்கு மறுக்கிறார்கள். நாமே ஆந்திரா மைசூருக்கு அனுப்பி வைக்கிறோம். அவர்கள் அங்கே சென்றுவிட்டு மறுபடியும் தமிழ்நாட்டிற்கு வர வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவேதான் தமிழ்நாட்டில் இந்தச் சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, ஸ்ரீமாவோ பண்டாரநாயகா விற்கும்—லால்பகதூர் சாஸ்திரிக்கும் ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தை தமிழ் நாடு சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறதா ? அப்படியானால் சமீபத்தில் இலங்கைப் பிரதமர், நம்முடைய பிரதமரைச் சந்தித்த நேரத்தில் அது குறித்து பிரச்னை எழுப்பினீர்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதிலே மாநில அரசுக்கு எந்த விதத் தொடர்பும் இல்லை. அது அத்தனைக்கும் மத்திய அரசுதான் பொறுப்பு. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல், ஸ்ரீமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இந்திய அரசு அவர்களை இங்கே அனுப்புகிறார்கள். பெரும்பாலோர் தமிழர்கள். எனவேதான், இங்கே வந்து தங்குகிறார்கள். அவர்களுக்குப் புனர் வாழ்வுத் திட்டங்களை செய்வதாக மத்திய அரசு ஒப்புக்கொண்டு, அதற்கு வேண்டிய நிதி உதவிகளையும் செய்கிறது. அவர்கள் கொடுக்கிற நிதியை வைத்து நாம் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம்.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து திரும்பிய அகதிகளில் 90 சத விகிதம் தமிழர்களாக இருக்கும்போது தமிழக அரசுக்கு எந்தவித சம்பந்தமும் இல்லாமல் அவர்களுடைய ஒப்பந்தம் இருப்பதால் அதை உடனடியாக மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, தமிழர்களின் நிலைமையைச் சீர் செய்வதற்கு என்னென்ன செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது 1964-ம் ஆண்டில் செய்து கொண்ட ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தில் நாம் தலையிடுவது அவ்வளவு முறையாக இருக்காது. அவர்களுக்கு ஆகும் செலவு அத்தனையும் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு, பல திட்டங்களையும் தீட்டியிருக்கிறது. அந்தத் திட்டங்களை நாம்தான் நிறைவேற்ற வேண்டும். எப்படி அவர்களை குடியமர்த்த வேண்டுமென்பதற்கு மாநில அரசு சிறு தொகை அளித்து வருகிறது. இது மத்திய அரசின் பிரச்னை. நாம் ஒன்றும் செய்வதற்கு இல்லை.

மு.ப திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து
9·30 வருகிற இந்த அகதிகளுக்கு மத்திய அரசு செய்கின்ற அந்த புனர்வாழ்வு திட்டங்களெல்லாம் போதிய அளவில் இல்லை என்ற குறைபாடு பரவலாக இருக்கிறது. பங்களாதேஷ் அகதிகளுக்கு கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்தார்கள். நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்கள் வருகிற பொழுது போதிய அக்கறை காட்டவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அந்தக் குறைபாட்டை போக்குவதற்கு நல்ல திட்டங்களை பெரிய அளவுக்குப் போடுவதற்கு மத்திய அரசைக் கேட்பார்களா? நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகத் தமிழக அரசும், மத்திய அரசும் செய்கின்ற புனர்வாழ்வுத் திட்டங்களைச் சமமாக திட்டங்களைப் போட்டு அவர்களுக்கு நல் வாழ்வு அளிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஸ்ரீலங்காவிலிருந்து வருகிறவர்கள் பெரும்பாலும் தோட்டத் தொழிலில் ஈடுபட்டவர்கள். அவர்கள் சாதாரணமாக அதிகமாக சாகுபடி செய்வதில் கூட நாட்டம் காட்டவில்லை.

1974 மார்ச் 29]

பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்கள் நம்முடைய மாநிலத்தில் கூனூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் ரப்பர் தோட்டங்கள் வைப்பதற்கு குடியமர்த்தப்படுகிருர்கள். வேறு சிலருக்கு விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்து, விவசாயப் பயிற்சி அளித்து, பணம் கொடுத்து, அதற்கான வழிவகைகள் செய்கிறேம்.

மத்திய அரசுதான் இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் தீட்டவேண்டும் என்று இதுவரையிலும் கேட்டுக்கொண்டு வந்தது. இப்பொழுது மாநில அரசை நீங்களே திட்டம் தீட்டுங்கள் என்று மாநில ப்ளானிங் கமிஷனை அவர்கள் கூறுகிருர்கள். அது பற்றி நமது அதிகாரிகளும் மத்திய அரசு அதிகாரிகளும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். அந்தப் பேச்சு முடிவுற்ற பிறகு எப்படிப்பட்ட திட்டங்கள் போடவேண்டும் என்பதை பரிசீலனை செய்து, எப்படி அவர்களை குடியமர்த்தலாம் என்பதுபற்றி முடிவு எடுக்கக் கூடும். அதற்குப் பிறகு தான் மத்திய அரசின் பங்கு எவ்வளவு, மாநில அரசின் பங்கு எவ்வளவு என்பதுபற்றி நிர்ணயிக்கக்கூடும். இப்பொழுது புதிய பேச்சு வார்த்தைகள் தொடங்கப் பெற்றிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு ஏதாவது அங்கேயிருந்து சொத்து, பணம் கொண்டு வருவதற்கு உரிமை இருந்ததா? அப்படியிருந்தால் அதன் விவரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு உதவி வழங்குகின்ற நேரத்தில், ஒன்றும் கிடைக்காதவர்களுக்கு அதிகப் பணம் கொடுத்து உதவுவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அந்த விவரம் இப்பொழுது இல்லை என்றுலும், ரூ. 5,000 வரையில் சொத்து கொண்டு வரலாம் என்று அவர்கள் முடிவு எடுத்தது எனக்கு நினைவு இருக்கிறது. நான் இதைப்பற்றி அடிக்கடி தெரிந்துகொண்டிருக்கிற காரணத்திஞல் அப்படித்தான் அப்பொழுது ஒத்துக்கொள்ளப்பட்டது. அந்த அளவுக்கு அவர்கள் நகையோ, பணமோ, காசோ கொண்டு வருகிருர்கள். இங்கே அவர்களுக்கு புனர்வாழ்வு திட்டங்கள் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. பல பேர்கள் புனர் வாழ்வு பெற்றிருக்கிருர்கள்.

ஓமலூர் அருகே மேம்பாலம்

*672 வினு—திரு. வீ. செல்லத்துரை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் நகரத்தில், சேலம்–மேட்டூர் (ஓமலூர் வழியாக) சாலையின் குறுக்கே ஒரு ரெயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.